[1995 ஏப்ரல் 6

(அ) விளாத்திகுளம் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டித் தரப்படும்?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : விளாத்திகுளம் அரசு மேல்நிலைப் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகம் கட்டிட மதிப்பீட்டில் 50% செலுத்த முன்வருமானால் அரசு தன் பங்காக 50% தொகையை செலுத்தி நடப்பு நிதியாண்டில் கூடுதல் கட்டிடம் கட்டித் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

(அ) திருவிடைமருதூர் அருகில் உள்ள காவிரி பாலம் செப்பனிடப்பட வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. எஸ். ஆசைமணி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எஸ். ஆசைமணி.

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் அருகில் சென்ற ஆண்டு உடைந்த காவிரி பாலம் செப்பனிடப்படாததால் அப்பகுதி மக்கள் அவதிப்படுவது குறித்த” அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

1995 ஏப்ரல் 6] [திரு. எஸ். கண்ணப்பன்]

அறிக்கை

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் அருகில் காவிரி ஆற்றில் உள்ள பாலமானது, நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பிலுள்ள இதர மாவட்டச் சாலையான திருவிடைமருதூர்-கோவிலாச்சேரி சாலையில் கி.மீ.2/6-ல் காவேரியாற்றின் குறுக்கே உள்ள மூன்று கண்களைக் கொண்ட பழைய வளைவுப்பாலமாகும். 1993-ம் ஆண்டு அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் பெய்த கடும் மழையின் காரணமாக இந்த பாலத்தின் அடித்தளத்தில் இருந்த பாதுகாப்புப் பணிகளும், பாலத்தின் இரண்டு கண்களும் இடிந்து விழுந்து விட்டது. இதனால், இந்தப் பாலத்தின் வழியே சென்று கொண்டிருந்த போக்குவரத்து, காவேரியாற்றின் கீழ் படுகையில் திருப்பனந்தாள்-ஆடுதுறை சாலை எனும் பெரிய மாவட்டச் சாலையில் கி.மீ.8/8-ல் உள்ள பாலத்தின் வழியே அனுமதிக்கப்பட்டது. மேலும் கவன ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள திருவிடைமருதூர் கோவிலாச்சேரி சாலையில் கி.மீ.2/6-ல் இடிந்த நிலையிலுள்ள பாலத்தை திரும்பக் கட்டும் பணியானது, 'தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்' கீழ் அரசு ஆணை எம்.எஸ்.எண்.644 வேளாண்மை (ட்டி.என்.எ.டிப்பி) துறை நாள் 16-11-94-ல் ஒப்புதல் வழங்கப்பட்ட பணிகளில், ரூ. 75 லட்சங்கள் மதிப்பில் இடம் பெற்றுள்ளது. மேற்படி பணிகள் செயலாக்கப்படவுள்ளது.

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையின்படி 16-11-94-லே வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் இப்பாலம் சேர்க்கப்பட்டு சுமார் 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே இடம் பெற்றுள்ளதாக சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைக்கு தஞ்சை மாவட்டத்திலே பார் புகழ் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தியதன் மூலம் அங்கே இருக்கின்ற பல்வேறு சாலைகளுக்கு கோடிக்கணக்கான ரூபாய் அள்ளிக் கொடுத்திருக்கிற இதய தெய்வம் புரட்சித் தலைவி அரசு, அதேபோல், நாகை மாவட்டத்திலே பல்வேறு சாலைகள் வீணாகியிருக்கின்ற நிலைமைகளை அறிந்து அங்கேயும் பல கோடி ரூபாய் அள்ளித் தந்திருக்கின்ற நம்முடைய சிறப்பு வாய்ந்த கழக ஆட்சியில் இன்றைக்கு இந்தக் கோடை காலத்திற்குள்ளே இந்தப் பாலத்தை முடிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால் கடந்த 4 ஆண்டு காலமாக காவிரி ஆற்றில் ஜூன் 12 ஆம் தேதி தண்ணீர் வருகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பிப்ரவரி மாதத்தில் தண்ணீர் நின்று அதற்குப் பின்னாலே ஜூன் மாதத்தில் அந்தத் தண்ணீர் வந்துவிடும் என்ற' காரணத்தால் இந்த இடைப்பட்ட காலத்திற்குள்ளே அந்தப் பாலத்தைக் கட்டி முடிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிற

காரணத்தால் நடப்பு ஆண்டிலேயே போர்க்கால அடிப்படையில் அமைச்சர் அவர்கள் இந்தப் பாலத்தைக் கட்டி முடிப்பதற்கு உத்தரவு பிறப்பிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பாலங்களை எல்லாம் சீரமைப்பதற்காக, புதியதாக கட்டுவதற்காக, உலக வங்கியோடு தொடர்பு கொண்டு, வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழே ஏறத்தாழ 20 கோடி ரூபாய் பெற்றுத் தந்தவர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய சீரிய முயற்சியின் காரணமாக உடனடியாக மதிப்பீடுகள் எல்லாம் தயாரிக்கப்பட்டு இப்போது தேசிய நெடுஞ்சாலை என்.எச்.45 என்று சொல்லப்படுகிற அந்தப் பிரிவின் தலைமைப் பொறியாளர் அவர்கள் இதற்கான மதிப்பீடுகள் தயாரிப்பதிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அந்தப் பணிகளுக்கான மதிப்பீடுகளுக்கு உலக வங்கியின் ஒப்புதல் பெற வேண்டும். ஏனென்று சொன்னால், அவர்கள் நிதி தருகின்றபோது அவர்களுடைய விதிமுறைகளின்படிதான் நாம் ஒப்பந்தங்கள் கோர வேண்டும். ஆகவே, அவர்களுடைய ஒப்புதல் பெறுவதற்காக அனுப்பப்பட்டிருக்கிறது. ஒப்புதல் பெறப்பட்டவுடன் உடனடியாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இந்தப் பணி துவங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) சிவகாசி, லவ்லி கெமிக்கல்ஸ் நிறுவனப் புகையினால் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. ஜெ. பாலகங்காதரன், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஜெ. பாலகங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட வேலாயுதம் சாலையிலுள்ள லவ்லி கெமிக்கல்ஸ் எனும் சிறுதொழில் நிறுவனத்திலிருந்து வெளியேறும் புகையினால் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படுவது குறித்த" அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது.